செய்தி வெளியீடு எண்: 2 2–1–2010

**<u>மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (2–1–2010) 113 நபர்களுக்கு கணினி இயக்குபவர்களுக்கான பணி நியமன ஆணைகளை நேரில் வழங்கினார்கள்.</u>**

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில், தமிழ்நாடு முழுவதும் உள்ள தொழிலாளர்களின் நலனை முன்னிட்டு மாவட்டங்களில் பணியாற்ற மொத்தம் 113 கணினி இயக்குபவர்களுக்கு மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (2–1–2010) தலைமைச் செயலகத்தில் ஆணைகளை நேரில் வழங்கி நல்லமுறையில் பணியாற்ற வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களது ஆணையின்படி, அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியப் பணிகள் மாவட்ட அளவில் பரவலாக்கப்பட்டது. வாரியப் பணிகள் சிறப்பாக நடைபெறும்வகையில் இதற்குத் தலைவராக திரு. பொன் குமார் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் நியமித்தார்கள்.

இந்த வாரியத்தில் 8 வகையான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் 38 வகையான கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள 15 முதல் 60 வயது வரை உள்ள தொழிலாளர்கள் உறுப்பினராகச் சேரத் தகுதியானவர்கள். இந்த வாரியத்தில் 1995 முதல் 30–12–2009 **<u>வரை</u>** 19,71,669 தொழிலாளர்கள் உறுப்பினராகப் பதிவு செய்துள்ளனர். மேலும் 2,65,259 தொழிலாளர்களுக்கு மொத்தம் ரூ.85 கோடியே 40 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 6,020 தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய நிலுவைத் தொகையாக 31–12–2009 வரை ரூ.5.57 கோடி வழங்கப்பட்டுள்ளது.

அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியப் பணிகள் மாவட்ட அளவில் பரவலாக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த அலுவலகங்கள் சிறப்பாகச் செயல்பட தமிழகம் முழுவதும் 113 கணினி இயக்குபவர்கள் பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டன. இந்தப் பணியாளர்களுக்கான தகுதி வாய்ந்தோர் பட்டியல், வேலைவாய்ப்புத் துறை மூலம் பெறப்பட்டு, தேர்வு செய்யப்பட்டனர்.

தொழிலாளர்கள் பதிவு அதிகமாக உள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர், சேலம், கோவை, கன்னியாகுமரி, மதுரை, திருவண்ணாமலை, தருமபுரி, வேலூர், விழுப்புரம், திண்டுக்கல், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு தலா 5 கணினி இயக்குபவர்களும், மற்றைய 18 மாவட்டங்களுக்கு **<u>தலா 3 கணினி இயக்குபவர்களும், ஆக மொத்தம் 113 நபர்களுக்கு பணி</u>** நியமன ஆணையினை மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (2–1–2010) தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்கள்.

பணி நியமன ஆணைகளைப் பெற்றவர்கள் தங்களது நன்றிகளை மாண்புமிகு துணை முதலமைச்சரிடத்தில் நேரில் தெரிவித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழிலாளர்கள் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் திரு. பொன்குமார், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. பிரபாகர் ராவ், தொழிலாளர் ஆணையர் திரு. அ. சுகுமாரன், கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு. பி. கருப்பசாமி, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியச் செயலாளர் திரு. கே. அழகேசன் உட்பட பலரும் பங்கேற்றனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.